**O.S. No. 118 /2020**

**Date: 24.06.2026**

**பி.வா.சா. 1 மருதையா**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு எந்த சர்வே எண்ணுக்கு நடக்குது என்று தெரியுமா என்றால் சர்வே எண்.272/5. மேற்படி சர்வே எண்ணில் மொத்த எவ்வளவு இடம் உள்ளது என்றால் 2 ஏக்கர் 11 செண்டு உள்ளது. மேற்படி நிலத்திற்கு வடபுறம் யாருடைய நிலம் உள்ளது அதன் சர்வே எண் என்னவென்று கேட்டால் சண்முக சேர்வை அனுபவத்தில் உள்ளது சர்வே எண் தெரியாது. சர்வே எண்.272/5 ன் தென்புறம் உள்ளது என் கையிருப்பு நிலம். மேற்படி கையிருப்பு நிலம் எப்படி பாத்தியப்பட்டது என்றால் நான் சின்ன சிவனு என்பவரிடம் இருந்து1998 ல் கிரையம் பெற்றேன். சர்வே எண்.271/4 சொத்து எனது கிரையதாரர்கள் பெயரில் இருப்பதை நான் பார்த்துள்ளேனா என்றால் பட்டாவை காண்பித்தார்கள். மேற்படி பட்டாவை நான் அவர்களிடமிருந்து வாங்கவில்லை. எனக்கு பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களை கிரையம் எழுதிக் கொடுத்தவர்களுக்கு மேற்படி சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. நான் கிரையம் முடிக்கும்போது கிரையதாரர்கள் பெயரில் உள்ள ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 5 ஆவணம் திருநெல்வேலி ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்து பெற்றதாக தாக்கல் செய்துள்ளேன் அதன் பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும் குத்தாலிங்கத் தேவர் என்பவரின் அப்பா பெயரில் உள்ள பட்டா. மாடசாமித் தேவரை தெரியுமா என்றால் தெரியாது. மாடசாமித் தேவருக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று தெரியுமா என்றால் 3 பேர் அந்த விவரம் எப்படி தெரியும் என்று கேட்டால் கேள்விபட்டேன். மேற்படி 3 நபர்களுக்கு இடையே பாகப் பிரிவினை நடந்ததாக சொல்லியுள்ளேன், அது எந்த வருடம் என்று கேட்டால் அவர்களுக்கு இடையே பாகப் பிரிவினை நடைபெறவில்லை கூட்டுக்குடும்பமாக தான் இருந்தார்கள். மாடசாமித் தேவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி மாடசாமியுடன் பிறந்தவர்கள் பெய தெரியுமா என்றால் கருப்பசாமி, சின்ன வெள்ளத்துரை. மேற்படி சின்ன வெள்ளத்துரை எப்போது இறந்தார் என்றுதெரியாது, அவருடைய வாரிசுகள் விவரம் தெரியாது. மேற்படி கருப்பசாமி தேவர் வாரிசுகள் விவரம் தெரியாது. மேற்படி மாடசாமி

மற்றும் அவரது சகோதரர்களின் வாரிசுகள் சொத்துக்களை பிரித்துக்கொண்டார்களா என்று கேட்டால் தெரியாது. நான் தவறான நபர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு பி.வா.சாஆ. 1,2 ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் 1ம் அயிட்ட சொத்து முழுவதும் ஆண்டிச் சேர்வை குமாரர் சண்முகம் சேர்வைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. சண்முகம் சேர்வை பெயரில் பட்டா எண்266 ஏற்பட்டது என்றாலும் அதனை மெய்பிக்கும் வகையில் நான் பிவா.சா.ஆ.5 ஆவணத்தை மன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி சண்முகம் சேர்வை 1990ம் வருடம் அவருடைய ஒரே மகனின் வாரிசுகளான இந்த வாதிகளுக்கு மட்டும் அடுத்த வாரிசுகளாக விட்டு விட்டு காலமாகிவிட்டார் என்றால் சரியல்ல. அதன் பின்பு தபசில் சொத்துக்களை இந்த வாதிகளே இன்று வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையில் கூறியுள்ள கொடிவழிகள் அனைத்தும் ஆதாரமற்ற கட்டுக்கதை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தின் மூலமாகவே சண்முகம் சேர்வையின் உரிமை நிலைநாட்டப்பட்டுள்ள நிலையில் வாதிகள் கேட்கக்கூடிய பி.வா.சா-ஆ 1,2 ஆவணங்களைப் பொருத்து செல்லக்கூடியதல்ல என்ற பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாதிகளின் முன்பாத்தியஸ்தர்களான சண்முகம் சேர்வையின் உரிமையினை பிரதிவாதியான நானே நிரூபித்து காட்டியுள்ளதால் இவ்வழக்கில் வாதிகள் கேட்டுள்ள விளம்புகை பரிகாரமும், நிரந்தர ஏவுகட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், வாதிகளின் செலவுத் தொகையுன் இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil